# அரையாண்டுத் தேர்வு

## மகிழ்ச்சி - எட்டாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 100 காலம் : 3 மணி

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

1. உணவில் ______________ உள்ளது.
2. இல்லாதவருக்குக் கொடுப்பதே ______________ ஆகும்.
3. தொகைநிலைத் தொடர் ______________ வகைப்படும்.
4. "வன்மை" என்ற சொல்லின் பொருள் ______________.
5. வேலுநாச்சியார் பிறந்த ஆண்டு ______________.

**II. பொருள் எழுதுக.** 5 x 1 = 5

1. கந்தம் – ______________________
2. எவ்வம் – ______________________
3. தூய்மை – ______________________
4. வன்மை – ______________________
5. சமதை – ______________________

**III. பொருத்துக.** 5 x 1 = 5

| | |
|---|---|
| 1. மூன்றறிவு | பண்புத்தொகை |
| 2. கயல்விழி | எறும்பு, கரையான் |
| 3. செந்தாமரை | கெடுதல் விகாரம் |
| 4. கேட்ட பாடல் | உவமைத் தொகை |
| 5. அறவினை | பெயரெச்சத் தொடர் |

**IV. பிரித்து எழுதுக.** 5 x 1 = 5

1. நெடுங்காலம் – ______________________

2. நற்றாமரை – ____________________

3. மேலுலகம் – ____________________

4. கருவிழி – ____________________

5. அச்சமின்றி – ____________________

**V. சேர்த்து எழுதுக.** 2 x 1 = 2

1. விடுதலை + உணர்வு = ____________________

2. அறம் + போராட்டம் = ____________________

**VI. எதிர்ச்சொல் எழுதுக.** 3 x 1 = 3

1. உண்மை x ____________________

2. காலை x ____________________

3. கற்றார் x ____________________

**VII. சிறுவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் பத்திற்கு மட்டும்)** 10 x 3 = 30

1. உணவுச் சங்கிலி ஒன்றை எழுதுக.
2. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன?
3. வினைத்தொகை என்பது யாது?
4. அமுதனின் கனவில் வந்தது யார்?
5. தாழம் பூவின் மணம் எத்தகையது?
6. அன்னப் பறவை எதை தேடிச் செல்லும்?
7. தீமையானது எது? சிறந்தது எது?
8. வறுமையால் இறப்பதை விடக் கொடியது எது?
9. தொடர் விளக்கை வைத்து கலீலியோ கண்டறிந்தவை யாவை?
10. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன?
11. வாணிதாசனின் சிறப்புப் பெயர்களை எழுதுக.
12. தலை சிறந்த பண்பு என்பது யாது?
13. “தென்னாட்டின் ஜான்சிராணி” என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?
14. புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. நாமக்கல் கவிஞர் இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.

**VIII. பெருவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் ஐந்திற்கு மட்டும்)** 5 x 7 = 35

1. காடுகளால் கிடைக்கும் பயன்களை எழுதுக.
2. “பனைமரம்” என்ற சொல்லிலுள்ள தொகையை விளக்குக.
3. அமுதனிடம் மரம் விடுத்த வேண்டுகோள் யாது?
4. “மடல்பெரிது தாழை” எனத் தொடங்கும் மூதுரை பாடலை எழுதுக.
5. இடைச்சொல் தொடருக்கும், உரிச்சொல் தொடருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை விளக்குக.
6. மெய்ப்பொருள் கல்வி பாடலின் பொருளை எழுதுக.
7. வேலுநாச்சியார் ஆங்கிலேயர்களை எவ்வாறு வென்றார்?
8. கெடுதல் விகாரத்தை சான்றுடன் விளக்குக.
9. “நம் நாடு” பாடல் கூறும் செய்திகளை எழுதுக.
10. பின்வரும் குறட்பாக்களை அடி பிறழாமல் எழுதுக.

    அ. “இரத்தலின் இன்னாது” எனத் தொடங்கும் குறள்.

    ஆ. “பொறுத்தல் தலை” என தொடங்கும் குறள்.

**IX. கடிதம் எழுதுக. (ஏதேனும் ஒன்று மட்டும்)** 1 x 10 = 10

1. விடுமுறை விண்ணப்பக் கடிதம் எழுதுக.
2. மாற்றுச் சான்றிதழ் வேண்டி தலைமை ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.
3. புத்தக விலைப் பட்டியல் கேட்டு புத்தகப் பதிப்பகத்தாருக்கு கடிதம் எழுதுக.